**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை வழங்கும் திட்டம் – 1995–96 ஆம் ஆண்டு முதல் 2008–2009 ஆம் ஆண்டு வரை உள்ள நிலுவைத் தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி. ந. 2.2)த் துறை

அரசாணை(நிலை) எண்.77 நாள்:24–09–2010

புரட்டாசி 11, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:-

1. அரசாணை(நிலை) எண். 210, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 13.11.2007.
2. அரசு ஆணை (நிலை) எண். 233, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 03.12.2007
3. அரசு ஆணை (நிலை) எண். 153, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 29.10.2008.
4. அரசு ஆணை (நிலை) எண். 37, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 9.3.2009.
5. அரசு ஆணை (நிலை) எண். 145, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 9.11.2009.
6. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதம் எண்.8197/ஊம2.4/09, நாள் 13.10.2009.

--------

**ஆணை:**

மாற்றுத் திறனாளிகளுக்கு இலவசப் பயணச் சலுகை வழங்கும் திட்டத்தின் கீழ் சில வரம்புகளுக்குட்பட்டு மாற்றுத் திறனாளிகள் சாதாரண வழித்தடங்களில் மட்டுமில்லாமல், விரைவுப் பேருந்துகளிலும் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் மாற்றுத் திறனாளி மாணவர்கள் கல்வி பயிலவும் வீட்டிலிருந்து பள்ளிக்கு சென்று வரவும் பேருந்துகளில் இலவச பயணச் சலுகை பெற்று வருகின்றனர். மேலும், இதர ஊனமுற்ற நபர்கள் சில நிபந்தனைகளுக்குட்பட்டு கல்லூரி / தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு சென்று பயிற்சி பெறவும், மருத்துவமனைகளில் மறுவாழ்வு பயற்சிகள் பெறவும் பணிபுரியும் இடங்களுக்கு 100 கிலோ மீட்டருக்கு மிகாமல் சென்று வரும் வகையில் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து வருகிறார்கள். பார்வையற்றோரை பொறுத்தமட்டில் இத்தகைய நிபந்தனைகள் தளர்த்தப்பட்டுள்ளன. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி தமிழகம் முழுவதும் அரசு விரைவுப் பேருந்து மற்றும் பிறசேவைகளில் பார்வையற்றோர்/கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் நான்கு முறை பயணம் செய்ய 75% பயணக் கட்டணச் சலுகை வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளும் பாகுபாடின்றி மாநிலம் முழுவதும் இரயில் கட்டணச் சலுகை போல் நான்கில் ஒரு பங்கு கட்டணத்துடன் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயண எண்ணிக்கை உச்சவரம்பின்றி பயணம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையின்படி மாற்றுத் திறனாளிகள் அரசு பேருந்துகளில் இலவச பயணம் செய்யும் திட்டத்தினை 2008–2009 ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்திட அனுமதித்து தொடராணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் அவ்வரசாணையில் நிலுவைத் தொகையை பொறுத்தமட்டில் மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான நல

அலுவலர்களிடம் போக்குவரத்து கழகங்களின் கேட்பு அவ்வலுவலர்களிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்ட பேருந்து சலுகையின்படி **1995–96** முதல் உள்ளதா என்றும் **1995–96**முதல் ஒவ்வொரு ஆண்டும் போக்குவரத்து கழகங்களுக்கு வழங்கப்பட்ட தொகை போக மீதி சரியாக கோரப்பட்டுள்ளதா என்றும் போக்குவரத்து கழகங்களின் கேட்பு தற்போதுள்ள நடைமுறையிலுள்ள மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி கணக்கீடு செய்யப்பட்டுள்ளதா என குறிப்பாக குறிப்பு பெற்று தனியே கருத்துரு அரசுக்கு அனுப்புமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையின்படி **2009–2010**ம் ஆண்டு இத்திட்டத்தை தொடரவும் இதற்கான செலவினமாக ரூ.**3,08,21,000/–** ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது தற்போது **1995–96** முதல் **2008–2009**ம் ஆண்டு வரை மாற்றுத் திறனாளிகளுக்கு போக்குவரத்து பயணச் சலுகை வழங்கும் திட்டத்தில் நிலுவையில் உள்ள தொகைக்கு மாவட்ட வாரியான பட்டியலுடன் அந்தந்த போக்குவரத்துக் கழகங்களின் மேலாண்மை இயக்குநர்களின் கையொப்பத்துடன், அந்தந்த மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்களின் சான்றொப்பம் பெற்று மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

**2.** மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு போக்குவரத்துக் கழகங்களில் இலவச பேருந்து பயண கட்டணச் சலுகை வழங்கியதற்கு பின்வருமாறு நிலுவைத் தொகை வழங்க வேண்டியுள்ளதாக மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | ஒப்பளிப்பு கோரப்பட்ட தொகை | ஒப்பளிப்பு செய்த தொகை | மீதித் தொகை |
|---|---|---|---|
| **1995–96** முதல் **1998–99** | **483.33** | **182.00** | **301.33** |
| **1999–2000** | **295.91** | **63.93** | **231.98** |
| **2000–01** | **362.77** | **32.79** | **329.98** |
| **2001–02** | **457.03** | **69.31** | **387.72** |
| **2002–03** | **556.04** | **95.90** | **460.14** |
| **2003–04** | **569.03** | **123.75** | **445.28** |
| **2004–05** | **628.90** | **293.98** | **334.92** |
| **2005–06** | **682.27** | **310.49** | **371.78** |
| **2006–07** | **719.12** | **307.94** | **411.18** |
| **2007–08** | **763.04** | **304.43** | **458.61** |
| **2008–09** | **868.14** | **313.08** | **555.06** |
| மொத்தம் | **6385.58** | **2097.60** | **4287.98** |

**3.** மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்த பின்னர், அதனை ஏற்று மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு பேருந்துகளில் இலவசப் பயண கட்டணச் சலுகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்திய வகையில் **1995–96** ஆம் ஆண்டு முதல் **2008–09**ஆம் ஆண்டு வரை அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை வழங்க முடிவு செய்து அதன்படி ரூ.**42,87,98,000/–**(ரூபாய் நாற்பத்து இரண்டு கோடியே எண்பத்தி ஏழு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகின்றது. இத் தொகையில் **50%** தொகையை அதாவது ரூ.**21,43,99,000/–** (ரூபாய் இருபத்து ஒரு கோடியே நாற்பத்து மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரம் மட்டும்)போக்குவரத்து கழகத்திற்கு வழங்கவும் மீதி **50%** தொகையான ரூ.**21,43,99,000/–**ஐ

அனைத்து போக்குவரத்து கழகங்களும் அரசுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையில் ஈடு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட மொத்த செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் –02. சமூக நலன் – 101 மாற்றுத் திறனாளிகள் நலன் – I திட்டத்தில் சேராதது BG– மாற்றுத் திறனாளிகளுக்கு பயணச் சலுகை–42–பணி அல்லது பொறுப்பேற்ற செலவுகள்.
(கு.தொ.கு. 2235–02–101–BG-4206)

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையில் போக்குவரத்து கழகத்திற்கு வழங்கப்பட வேண்டிய 50 தொகையான ரூ.21,43,99,000/– போக்குவரத்து கழகத்திற்கு பணமாக வழங்கப்படாமல், காசோலையாக இக்கழகத்தின் தன்வைப்பு கணக்கில் கீழ்கண்டவாறு பற்று வைக்கப்பட வேண்டும்:–

8443-00-Civil Deposists-800-other Deposits-BB-Deposits of Tamil Nadu Transport Development- Finance Corporation Limited (TDFC)
(DPC No.8443-00-800-BB-000A) (Receipts)

இத்தொகை கீழ்கண்ட போக்குவரத்து கழகங்களுக்கு வழங்கப்பட வேண்டும்

<u>ரொக்கம் பெற வேண்டிய அரசு போக்குவரத்து கழகங்கள்</u>

(ரூபாய்)

| | |
|---|---|
| மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை. | 1,87,61,000/– |
| அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிமிடெட், சென்னை. | 71,000/– |
| தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம் | 4,80,48,500/– |
| தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம். | 3,55,95,000/– |
| தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர். | 2,80,54,500/– |
| தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம். | 3,58,43,000/– |
| தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை | 4,80,26,000/– |
| மொத்தம் | 21,43,99,000/– |

6. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையில் போக்குவரத்து கழகங்கள் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய கடன் தொகைக்காக ரூ.21,43,99,000/– கீழ்காணும் கணக்குத் தலைப்பில் ஈடு செய்யப்பட வேண்டும்.

7055–00 சாலை போக்குவரத்துக்கான கடன்கள்–190 பொதுத்துறை நிறுவனங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் கடன்கள் பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II–மாநிலத் திட்டம்–JB மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு குறுகிய கால கடன்.
(கு.தொ.கு. 7055–00–190–JB–000J) (Receipts)

அரசு நிறுவனங்களின் கடன் மற்றும் ஈடு செய்யும் தொகையின் விவரம்

**(i). மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை.**

| | |
|---|---|
| 31–03–2010 அன்றுள்ளவாறு கடன் நிலுவை (அ.ஆ.(நிலை)எண்.19, போ.வ.துறை, நாள் 3–3–2006) | ரூ.6,00,00,000/– |
| **கழிக்க:** 1995–1996 முதல் 2008–2009 வரை அரசுப் பேருந்துகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச கட்டணச் சலுகை வழங்கியதற்கான இழப்பீட்டுத் தொகை | ரூ.1,87,61,000/– |
| **மீதி கடன் நிலுவைத் தொகை** | ரூ.4,12,39,000/– |

**(ii). அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்(தமிழ்நாடு)லிமிடெட், சென்னை.**

| | |
|---|---|
| 31–03–2010 அன்றுள்ளவாறு கடன் நிலுவை (அ.ஆ.(நிலை)எண்.23, போ.வ.துறை, நாள் 5–3–2007) | ரூ.5,08,90,000/– |
| **கழிக்க:** 1995–1996 முதல் 2008–2009 வரை அரசுப் பேருந்துகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச கட்டணச் சலுகை வழங்கியதற்கான இழப்பீட்டுத் தொகை | ரூ. 71,000/– |
| **மீதி கடன் நிலுவைத் தொகை** | ரூ.5,08,19,000/– |

**(iii). தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம்.**

| | |
|---|---|
| 31–03–2010 அன்றுள்ளவாறு கடன் நிலுவை (அ.ஆ.(நிலை)எண்.19, போ.வ.துறை, நாள் 03–03–2006) | ரூ.5,00,00,000/– |
| **கழிக்க:** 1995–1996 முதல் 2008–2009 வரை அரசுப் பேருந்துகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச கட்டணச் சலுகை வழங்கியதற்கான இழப்பீட்டுத் தொகை | ரூ.4,80,48,500/– |
| **மீதி கடன் நிலுவைத் தொகை** | ரூ.19,51,500/– |

**(iv). தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம்**

| | |
|---|---|
| 31–03–2010 அன்றுள்ளவாறு கடன் நிலுவை (அ.ஆ.(நிலை)எண்.19, போ.வ.துறை, நாள் 03–03–2006) | ரூ.4,00,00,000/– |

| | |
|---|---|
| **கழிக்க:**<br>**1995–1996** முதல் **2008–2009** வரை அரசுப் பேருந்துகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச கட்டணச் சலுகை வழங்கியதற்கான இழப்பீட்டுத் தொகை | ரூ. 3,55,95,000/– |
| **மீதி கடன் நிலுவைத் தொகை** | ரூ.44,05,000/– |

**(v). தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர்**

| | |
|---|---|
| 31–03–2010 அன்றுள்ளவாறு கடன் நிலுவை<br>(அ.ஆ.(நிலை)எண்.19, போ.வ.துறை,<br>நாள் 03–03–2006) | ரூ.7,00,00,000/– |
| **கழிக்க:**<br>**1995–1996** முதல் **2008–2009** வரை அரசுப் பேருந்துகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச கட்டணச் சலுகை வழங்கியதற்கான இழப்பீட்டுத் தொகை | ரூ. 2,80,54,500/– |
| **மீதி கடன் நிலுவைத் தொகை** | ரூ.4,19,45,500/– |

**(vi). தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம்**

| | |
|---|---|
| 31–03–2010 அன்றுள்ளவாறு கடன் நிலுவை<br>(அ.ஆ.(நிலை)எண்.19, போ.வ.துறை,<br>நாள் 03–03–2006) | ரூ.4,00,00,000/– |
| **கழிக்க:**<br>**1995–1996** முதல் **2008–2009** வரை அரசுப் பேருந்துகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச கட்டணச் சலுகை வழங்கியதற்கான இழப்பீட்டுத் தொகை | ரூ. 3,58,43,000/– |
| **மீதி கடன் நிலுவைத் தொகை** | ரூ.41,57,000/– |

**(vii) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை**

| | |
|---|---|
| 31–03–2010 அன்றுள்ளவாறு கடன் நிலுவை<br>(அ.ஆ.(நிலை)எண்.19, போ.வ.துறை,<br>நாள் 03–03–2006) | ரூ.9,00,00,000/– |
| **கழிக்க:**<br>**1995–1996** முதல் **2008–2009** வரை அரசுப் பேருந்துகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச கட்டணச் சலுகை வழங்கியதற்கான இழப்பீட்டுத் தொகை | ரூ. 4,80,26,000/– |
| **மீதி கடன் நிலுவைத் தொகை** | ரூ.4,19,74,000/– |

7. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப் பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி(வ.செ.பொ.I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ. பொ.I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2010–2011 துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்குரிய கருத்துருவினை நிதி (வ.செ.பொது.I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை போக்குவரத்து துறையின் அ.சா.கு எண்.13037/ட்டி1/10–1, நாள்27.8.10 மற்றும் நிதித் துறையின் அ.சா.குஎண்.நிதி(சந)/49994/10, நாள்16.9.10 அத்துறையின் ஒத்திசைவுடன் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.939 (தொள்ளாயிரத்து முப்பத்து ஒன்பது) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா. இராம மோகன ராவ்,
அரசு முதன்மைச் செயலாளர்(பொ).

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
தலைமக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35/79.

<u>நகல்:-</u>
போக்குவரத்துத் துறை, சென்னை–9.
நிதி (சமூக நலம், வ.செ.பொது.I மற்றும் II, கடன் மற்றும் முன்பணங்கள்)த்துறை, சென்னை–9.
ச.ந(ம)ச.தித்துறை அனைத்துப் பிரிவுகள்
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//